TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் X.] AUGUST, 1910-ஸு ஆகஸ்ற்றுமீ. [இலக்கம் 3.

மிருகங்களின் மகா சாஸனப் பட்டயம்.

அநேக ஜனங்கள் வாயில்லாப் பிராணிகளின் வாழ்க்கையைப்பற்றி உதாசீனமுள்ளவர்களாய், இந்தச் சிருஷ்டியில் மனிதரைப் போலவே அவைகளுக்கும் சில சுதந்திரங்களிருக்கின்றனவென்னும் விஷயத்தை நினைப்பதேயில்லை. இது கொஞ்சமேனும் சரியானதல்ல. மனிதர் தங்களுடைய சுதந்திரங்களைப் பாராட்டுதல்போலவே தங்களுக்குள்ள கடமைகளையும் கவனித்தல்வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்ய முயல்வார்களானால் அவர்களுக்குரிய சுதந்திரம் தானே கிடைக்கும். மனிதருக்கு முக்கியமாயுள்ள கடமை எல்லா ஜீவராசிகளிடத்திலும் அன்பு பாராட்டுவதே. அவ்வாறு செலுத்துகிற அன்பிற்கு, இவ்வளவுதானென்றோர் எல்லை யேற்படுத்திக்கொள்ளக்கூடாது. அன்பு சுபாவத்தில் சர்வ வியாபகமானது. தனக்கு மிஞ்சித்தானே தருமமென்று சொல்லித் தன்மட்டில் காப்பாற்றிக்கொள்ளக் கூடாது. சன்மார்க்க வொழுக்க மென்பதில் இன்னின்ன விதமான செய்கைகள்தான் அடங்கும் இன்னின்னவை அடங்காவென்று வரையறுத்தல் கஷ்டம். உணர்ச்சியில்லாத மரம், புல் பூண்டு, புஷ்பம் முதலியவற்றிற்கும்கூட நாம் தீமை விளைவிக்கிறோமென்று சொல்லவுங்கூடும். இது அலங்காரார்த்தஞ் சொன்னதல்ல.

மனிதருக்கு இன்றியமையாப் பொருள்களாயிருந்து பயன்படத்தக்கவையாயும், ஆவசியகமாக வில்லாமல் அழகுமுதலிய வின்பங்களைமட்டுந் தரத்தக்கவையாயு மிருக்கிற விளைவுப்பொருள்களெல்லாம்மனிதர்களிடத்திலிருந்து நன்மையு மடையக்கூடும், தீமையு மடையக்கூடும். ஆகவே, அன்பு என்பதற்கு யாதொரு எல்லையு மேற்படுத்தாமல் இப்பிரபஞ்சத்திலுள்ள வெல்லா வஸ்துக்களினிடத்திலும் சமத்துவ பாவனை கொள்ளல்வேண்டும். இது நம்முடைய புத்திக்கு நன்றாய்த் தெரிந்தால் பிராணிகளுக்கு ஏதேனும் சுதந்திரமுண்டா வில்லையா வென்னும் வழக்கு பேசுவதை நிறுத்திவிட்டு, நாம் அவைகளுக்குச் செய்யவேண்டிய கடமை யென்ன வென்று விசாரிக்கத் தொடங்குவோம். பிராணிகளிடத்திலிருந்து நமக்குக் கிடைக்கக் கூடிய பிரயோஜனங்களையும் இன்பங்களையுமட்டும் அனுபவித்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாக அவைகளுக்கு நாம் ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லையா? நாம் சுயநயம் பாராட்டுகிறவர்களாயிருப்பது தகுதியா? சில காலத்திற்குமுன் ஜனங்களுக்கு இவ்வித எண்ணங்கள் தோன்றாமலே யிருந்தன. இப்பொழுது எல்லாரும் தெய்வபக்தி யுடையவர்களாயும் பிராணிகளிடத்தில் தயையுள்ளவர்களாயும் ஆகிக்கொண்டு வருகிறார்கள். மனிதரின் ஓய்வுநேரத்தில் விநோதார்த்தமாயும் அவர்களுடைய பொழுது போக்குக்காகவும் உபயோகிக்கப்பட்டு மற்றக் காலங்களில் உபேக்ஷையாய்த் தள்ளப்படுவதற்காகப் பிராணிகள் சிருஷ்டிக்கப்படவில்லை. அவைகளின் திக்கற்ற நிலையும் காப்பில்லாத் தன்மையும் நமக்கு நன்றாய்ப் புலப்படுகிறது. இவ்வுலகத்தில் அவைகளும் நம்முடன் சரிபாத்தியதையு

டைய சககாரிகளா யிருக்கின்றனவென்றும், மனப்பூர்வமா யவைகளை யாதரிக்கவேண்டு மென்றும் ஒப்புக்கொள்ளவேண்டும். அவை களுக் கேதாவது துன்பம் வந்தால் அது நமக்கு வந்ததுபோல பாவிக்கவேண்டும்.

தன்னுடைய குதிரையையாவது நாயையா வது அடிக்கிற ஒருவனுக்கு அவனுடைய மனைவி மக்களிடத்தில் இரக்கமிருக்குமென்று நம்பக்கூடவில்லை. ஆயுதங்களோடு கூடி எதிர்க்கிற மனிதர்களிடத்தினின்றும் காத் துக்கொள்ளச் சக்தியற்ற பிராணிகளை வேண் டுமென்று ஹிம்சை செய்வது தகாத காரிய மென்று அறிவாளிகள் கண்டிக்கிறார்கள். சிறு புழுமுதல் மனித னீறாகவுள்ள பிராணிக ளெல்லாம் முக்கியமானதும் ஜீவாதாரத்திற் குரியதுமான தொழில்களைப் புரிந்துவருகின் றன. இதற் குதாரணமாக, பறவைகள் பயி ரை நாசஞ்செய்கின்றனவென்று அவைகளைச் சம்ஹாரம் செய்த விடங்களில் அப்பறவை களைக்காட்டிலும் நாசகாரிகளான சிறு கிரு மிகள் உற்பத்தியாகிப் பயிர்களை முன்னிலும் கேவலமாக்கிவிட்டன. பறவைகளிருந்தால் அக்கிருமிகள் பயிரினிடத்தில் அணுகா. ஆக வே நாம் பிரகிருதியின் சுபாவத்திற்கு விரோ தமாய்ச் செய்கிறதெல்லாம் அபாயமானதே. மேலும், நமக்கு நஷ்டத்தை விளைவிக்கிற தென்று நாம் நினைக்கிற ஜெந்துக்கள் அந்த நஷ்டத்திற்கு எத்தனையோமடங்கு அதிக மான உதவியைச் செய்கின்றன. அவைகளி னாலுண்டாகும் பிரயோசனத்துடன் அவை கள் நமக்குக் கொடுக்கிற இன்பத்தையுங் கவ னிப்போம். கணக்கற்ற மிருகங்களும் பற வைகளும் நம்முடைய கண்ணைக் கவரத்தக்க அழகு வாய்ந்திருக்கின்றன. குயில், வானம் பாடி முதலிய பறவைகள் பாடுவது நம் செ விக்கு எவ்வளவு ரம்மியமாயிருக்கிறது. இப் படிப்பட்ட விசித்திரமான ஜீவன்க ளில்லா விட்டால் இவ்வுலகம் பாழடைந்துவிடுமென் பதற்குச் சந்தேகமேயில்லை.

சிருஷ்டியில் உண்மை விளங்காததும் கார ணந்தோன்றாததுமான கிருத்தியங்கள் அநே கம் நடந்தேறி வந்தபோதிலும், அவைகளில் காணப்படுவனவெல்லாம் சர்வசக்தியுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறாரென்னும் விஷயத் தையும் உயிரின் விஸ்தாரத் தன்மையையும் நன்றாய் விளக்குகின்றன. உலகத்திலுள்ள பொருள்களி லெதுவு முயிரற்றதல்லவென் றும், அவ்வாறு காணப்படுகிற ஜடப்பொருள் களிலும் உயிர் உண்டாகத்தக்க ஏதுக்கள் அமைந் திருக்கின்றனவென்றும் சாஸ்திர ஆராய்ச்சியுடைவர்கள் கண்டுபிடித்திருக்கி றார்கள். இவ்விஷயத்தையே டாக்டர் சாரல் டன் பாஸ்தியன் என்னும் தத்துவ சாஸ்திரி பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:— "உல கத்தில் ஜடப்பொருள்களென்று சொல்லப் படுகிற வஸ்துக்களின் எல்லா அணுக்களி லுங்கூட மானவீகத் தன்மை பொருந்தி யிருக்கிறது. அதாவது அவைகளும் தெய் வத்தன்மை வாய்ந்திருக்கின்றன" எனவே, எந்த வஸ்துவையும் சாமானியமாகவாவது அற்பமாகவாவது எண்ணக்கூடாது. பிரகிரு தியில் இன்னவேலைக்காக அது நியமிக்கப் பட்டிருக்கிறதென்று அறிய முடியாமலிருந்த போதிலும், நம்மைப்போலவே ஏதோ கார ணார்த்தம்தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற தென்று நினைக்கவேண்டும். பார்ப்பதற்கு அது சிறியதா யிருந்தபோதிலும் அது செய் கிற வேலை இத்தன்மைத்தென்று யாருக்குத் தெரியும்? மனிதர் பசிதீர வுண்டு உறங் கிக் காலங்கழிப்பதற்காகச் சிருஷ்டிக்கப்பட வில்லை. சூரிய சந்திர நக்ஷத்திரங்கள் வீணுக் காகப் பிரகாசிக்கிறதில்லை. இந்த அண்டத் தில் நடக்கிற எந்தக் காரியமும் வீணுக்கல்ல. இவ்வுலகம் செல்லவேண்டிய கதிக்கு மனி தன் மாத்திரமன்றி எல்லாவித ஜீவராசிக ளும் ஒருங்கு சேர்ந்து உதவிபுரிகிறதா யிருக்கிறது. ஆகையால் "கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க வெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே" என் னும் மூத்தோர் வாக்கியத்தை மேற்கொண்டு ஜீவகோடிகளுக்கு நாம் ஹிம்சை செய்யாம லிருப்பதுடன் பிறரையும் அக்கொடுந் தொழிலினின்றும் விலகும்படிப் போதிக்க வேண்டும்.

ஜியார்ஜ் டி. ஏஞ்ஜெல் துரை.

அமெரிக்கா கண்டத்தில் ஜீவஹிம்சை நிவாரணத்தின்பொருட்டு முதல் முதல் பிர யாசை யெடுத்துக்கொண்டு மாசசூஸெட்ஸ் என்னும் பட்டணத்தில் ஓர் சங்கத்தை ஸ்தா பித்த ஜியார்ஜ் டி. ஏஞ்ஜெல் துரையவர்க ளுக்கு வாயில்லாப் பிராணிகளின் அபிமா

னிகளெல்லோரும் அதிகக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தங்களுடையசொந்தசுகதுக்கங்களுக்குச் சாராத விஷயங்களில் கொஞ்சமேனும் உற்சாகமில்லாத ஜனங்களுக்கு நடுவில் அவர் ஆதியிலிந்த நற்காரியத்திற்கு முயன்றபோது எவ்வளவோ இடையூறுகள் வந்தபோதிலும் அவைகளைச் சிறிதும் கவனியாமல் "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்னும் வாக்கியத்தைத் தனக்கு உறுதிமொழியாகக் கொண்டு விடாமுயற்சியினால் தன் காரியங்களிலெல்லாம் ஜெயமடைந்துவந்தார். அவர் பாலியத்திலேயே தந்தை இறந்து தன் தாயாரால் வளர்க்கப்பட்டார். அந்த அம்மை எல்லா ஜீவன்களுக்கும் நன்மை செய்வதையே கடமையாகக்கொண்ட உத்தமியாதலால், இவருக்கும் குழந்தைப் பருவமுதல் எல்லா ஜெந்துக்களிடத்திலும் அன்பும் காருண்ணியமுமுண்டாயின. அவருடைய பாலியத்தில் மிருகங்களுக்கு யாராவது ஹிம்சை செய்வதை அவர் கண்டால் அவர்களை அப்படிச் செய்யவேண்டாமென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்வதுடன், இத்தகைய கொரேச் செயல்களை நிறுத்துவதற்கு இராஜாங்கத்தார் ஏன் சட்டங்க ளேற்படுத்தக்கூடாதென்று தானே ஆலோசிப்பார். பிறகு அவருடைய படிப்பு முடிந்து சம்பாதிக்கிற வயது வரவே அவர் நியாயவாதித் தொழிலில் பிரவேசித்துத் தாம் சம்பாதித்த திரவியத்தில் தமக்கும் தம் தாயாருக்கும் போஷணார்த்தம் வேண்டிய வளவுமாத்திரம் எடுத்துக்கொண்டு மற்றதைப் பள்ளிக்கூடங்களில் மாணுக்கருக்கு ஜீவ ஹிம்சை நிவாரணத்தைப் பற்றிப் போதிப்பதற்காகச் செலவு செய்து வந்தனர். இப்படியிருக்கையில் 1868—ம் வருஷத்தில் போஸ்டன் நகரத்துக்கருகில் ஒரு குதிரைப் பந்தயம் நடந்தது. அந்தக் குதிரைகள் நாற்பது மைல் தூரம் கரடுமுரடான பாதையில் ஓடவேண்டியதாயிருந்ததினால், அவை மிகவும் அலுத்துப்போய்க் காயங்களடைந்து வருந்தினதை ஏஞ்ஜெல் துரை பார்த்து இக்கொரேமான காரியத்தைப்பற்றிக் கண்டித்துப் பேசி, இனி அப்படிப்பட்ட பந்தயங்களை நிறுத்தச் சட்டமேற்படுத்தவேண்டுமென்றும் சொல்லி, பல கனதனவான்களைத் தமக் குதவிபுரியும்படி தூண்டினர். அவர்களெல்லோரும் சேர்ந்து உடனே ஒரு சங்கம் ஏற்படுத்தி, முனிசிபல் உத்தியோகஸ்தர்கள் போலீஸ் அதிகாரிகள் முதலிய இவர்களை, சங்கத்து அங்கத்தினாகளை யதிகமாக்கும்படி கேட்டுக்கொள்ளவே, அவர்கள் மூன்று வாரங்களுக்குள் 1600 ஜனங்களைச் சேர்த்துவிட்டார்கள். கொஞ்சகாலத்துக்குப் பிறகு அவர் இக்காரியம் பாடசாலைகளில் போதிப்பதினாலும் பிரசங்கங்கள் செய்வதினாலும் மாத்திரம் பரவாது, இதைப் பத்திரிகை வாயிலாகத்தான் உலக முழுவதும் பரவச்செய்ய முடியுமென்று சொல்லி "நம்முடைய வாயில்லா ஜெந்துக்கள்" என்னும் ஓர் பத்திரிகையைப் பிரசுரம் செய்ய முதலிட்டார். அதற்குமுன் இங்கிலாந்திலும் இதர ஐரோப்பிய தேசங்களிலும் ஜீவ ஹிம்சை நிவாரணச் சங்கங்க ளிருந்தபோதிலும் அவை பத்திரிகைகளைப் பிரசுரஞ் செய்துவரவில்லை. இந்த வுபாய மிவருக்குத்தான் முதலில் உதித்தது. வரவர இத் தொழிலி லிவருக்கு அதிகமாய்க் காலங் கழிக்கவேண்டுமென்று தோன்றியபடியாலும் அவர் தம் ஜீவனோபாயத்தையும் பார்த்துக் கொண்டு இதையும் செய்ய முடியாமற்போனதாலும் அவர் தம் நியாயவாதித்தொழிலையும் விட்டுவிட்டார். அதுமுதல் அவர் அமெரிக்கா ஐக்கியமாகாணங்கள் முழுதும் திரிந்து, அங்கங்கே உயிர்வதை நீக்கவேண்டுமென்று பிரசங்கித்துவந்தார். கால்நடைகளை விற்கிற சந்தைகளுக்குத் தாம் கந்தைத் துணிகளை யுடுத்திக்கொண்டு சென்று, அவ்விடங்களில் நடக்கிற அக்கிரமங்களையெல்லாம் நேரே பார்த்துவந்து, அவைகளை நிறுத்தவேண்டுமென்று ஜனங்களுக்குப் பிரசங்கிப்பார். இன்னும் பலவிடங்களில் ஜீவ ஹிம்சை நிவாரண சங்கங்களை ஸ்தாபித்துப் பத்திரிகைகளைப் பிரசுரஞ் செய்யவும் ஏற்பாடுகள் செய்துவந்தார். 1869—ம் வருஷத்தில் இங்கிலாந்திலிருக்கும் ஜீ. ஹி. நி. இராஜ சங்கத்தைப் பார்க்கவேண்டுமென்று போயிருந்தபோது, அங்கே அவர் செய்த உபந்நியாசத்தில் அச்சங்கமும் அவருடைய சங்கத்தைப்போலவே ஒரு பத்திரிகை வெளியிட வேண்டுமென்று சொல்லவே, அச்சங்கத்தாரும் "ஜெந்து பிரபஞ்சம்" என்னுமோர் பத்திரிகையைப்பிரசுரம் செய்துவருகிறார்கள். இவ்வாறு பலவிதங்களில் அவர் ஜீவ ஹிம்சை நிவாரணத்தின்பொருட்டு உழைத்

து, சென்ற 1909-ம் வருஷம் மார்ச்சுமீ 16-தேதி தமது 86-வது வயதில் காலமாய் விட்டார். தம் வாழ்நாள் முழுதும் அவ்வளவு ஊக்கத்தோ டுழைத்துவந்த இத்தகைய பெருங் கருணையாளர்களின் சரித்திரத்தைப் படித்து ஒவ்வொருவரும் அப்படியே செய்ய முயல்வார்களாக!

மிருகங்கள் மனிதரைக் காப்பாற்றும்.

மிருகங்களி னுதவியால் மனிதர் அபாயங்களினின்றுந் தப்பிப் பிழைத்ததாக ஓர் பத்திரிகையி லெழுதப்பட்ட பல விருத்தாந்தங்களில் சிலவற்றை இதனடியில் கூறுவோம். இங்கிலாந்து தேசத்தில் ஓகிங்காம் என்னும் ஊரில் ஒரு துரை யொருநாள் தூங்கிக்கொண்டிருக்கையில் அவருடைய சகோதரரின் பூனை தம் முகத்தை அதன் கால்களினால் தடவித் தடவி யெழுப்பி உரக்கக் கூச்சல் போட்டதாம். உடனே யவர் திடுக்கிட்டு எழுந்து பார்க்கையில் தம் அறையில் புகை நிரம்பியிருந்தது. அவர் வெளியே வந்து அடுத்த அறையில் படுத்திருந்த தம் சகோதரரையும் அவருடைய மனைவியையும் எழுப்பி, பிறகு எல்லோரும் வீட்டுக்கு வெளியே போய்ப் பார்க்கையில் வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. அந்தப் பூனை யில்லாவிட்டால் அவர்களும் வீட்டுடன் எரிந்துபோய்விட்டிருப்பார்களல்லவா!

பாரன்ஸ்லே என்னு மூரில் இன்னொரு துரையினுடைய ஆறு வயதுள்ள குழந்தை யொன்று பந்து விளையாடிக்கொண்டிருக்கையில் அப்பந்து அருகிலிருந்த தண்ணீர்த் தொட்டியில் விழுந்தது. அதை யெடுக்கச் சென்ற அக்குழந்தையும் அதில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்தது. அருகிலிருந்த ஒரு நாய் அதைப் பார்த்து அத்தொட்டியில் மூழ்கி யக்குழந்தையின் கையைத் தன் வாயில் கௌவிக்கொண்டு கரைக்கு இழுத்துக்கொண்டுவந்தது. நாய் தண்ணீரில் குதித்த சப்தத்தை அண்டைவீட்டுக் கூரையின் மேல் கொல்லத்துவேலை செய்துகொண்டிருந்தவன் கேட்டுக் கீழே இறங்கிவந்து பார்க்கையில், நாய் குழந்தையை இழுத்துக்கொண்டு வருவதைப் பார்த்தான். அவன் அக்குழந்தையையும் நாயையும் துரையினுடைய வீட்டிற்கழைத்துக்கொண்டுபோய் நடந்த சங்கதிகளைச் சொல்ல, அத்துரை அந்த நாயின் நற்செய்கைக் கறிகுறியாக அதற்கு ஒரு வெள்ளிக் கழுத்துப்பட்டை செய்து அதில் இந்தத் தீரமான செய்கையையும் பதித்தெழுதி அதன் கழுத்தில் கட்டிவைத்தார்.

அப்டன் பார்க்கு என்னும் ஊரில் ஓர் தெருவில் ஒருநாள் விடியற்காலையில் ஊர்க்காவலாளியாய்த் திரிந்துகொண்டிருந்த ஒரு போலீஸ் சேவகன் திடீரென்று ஒரு வீட்டுச் சாளரத்தின் கண்ணாடிகள் உடைபடுகிற சத்தங்கேட்டு அவ்வீட்டண்டை சென்றான். உடைந்த ஜன்னலின் வழியாக ஒருவன் வெளியில் வந்து போலீஸ்காரனைப் பார்த்து "எனக்குத் திக்குமுக்கலாயிருக்கிறது. வீட்டுக்குள் புகை சூழ்ந்துகொண்டிருக்கிறது. மாடியின்மேல் ஐந்துபேர் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டுக் கீழே மூர்ச்சையாய் விழுந்துவிட்டான். அந்தச் சேவகன் உடனே இன்னும் சிலபேரைக் கூட்டிக்கொண்டு வீட்டில் நுழைந்து, மாடியில் புகையில் அகப்பட்டுத் தடுமாறிக்கொண்டிருக்கிற ஐந்துபேர்களையும் வெளியே இழுத்துக்கொண்டு வந்துவிட்டான். பிறகு நெருப்பவிக்கும் யந்திரத்தைக் கொண்டு வந்து நெருப்பையு மவித்தார்கள். சில மணி நேரங்கழித்து அவர்களுக்கெல்லாம் மூர்ச்சை தெளிந்து சௌக்கியமானவுடனே, அவ்வீட்டுக்குரியவரான ரீட்ஸ் என்னும் துரைமகன் தான் அன்று பிழைத்தது தன்னுடைய சிறு நாயினால்தான் என்று நெருப்புப் பற்றினவுடனே அது அவரை வந்து எழுப்பிய சங்கதியைச் சொன்னார். ஆனால் அந்த நாய் தன் எஜமானனைமட்டு மெழுப்பவில்லை. மற்ற ஐந்துபேரையும் அது போய் எழுப்பிற்றாம். அந்த நெருப்பிலும் புகையிலும் அந்த நாய் தன்னுடைய புத்தியை இழந்துவிடாமல் அவ்வாறுபேரையு மெழுப்பி அவர்களைக் காப்பாற்றின தென்பதைக் கேட்க மிக்க ஆச்சரியமாயிருக்கிறது!

1907-ம் வருஷத்தில் ஹிமாலய பர்வதத்தில் லான்ஸ்டவுன் என்னும் இராணுவ ஸ்தலத்திலிருந்த காப்டன் ஹாலண்டு என்னும் போர்த்தலைவர் ஒருநாட் காலையில் தன்னுடைய நாயுடன் வெளியே போய்க்கொண்டிருக்கையில் ஒரு பாறையினின்று மற்றொரு பாறைக்குத் தாண்டும்பொழுது, தவறி

விழுந்து மூர்ச்சையாய்க் கிடந்துவிட்டார். அன்று சாயங்காலம் நேபாள ராணுவத்தைச்சேர்ந்த ஒரு சேவகன் விறகு வெட்டிக்கொண்டு போவதற்காகத் தன் மனைவியுடன் அக்காட்டுக்கு வந்தான். அவர்கள் கட்டை வெட்டிக்கொண்டிருக்கையில் அந்த ஸ்திரீயினிடத்தில் ஓர் நாய் ஓடிவந்து குரைப்பதும் மறுபடி கொஞ்சம்தூரம் ஓடிப்போவதும் திரும்பி அவளிடஞ் சென்று குரைப்பதுமாயிருந்தது. அது தன்னைக் கூப்பிடுவதாகத் தான் அறிந்து அவள் அதன்பின்னே போகத் தலைப்பட்டவுடனே, அந்த நாய் குரைப்பதை நிறுத்திவிட்டு அவளைத் தன் எஜமானன் விழுந்துகிடக்கிற பாறைக்கு அழைத்துச் சென்றது. அதைக் கண்டவுடனே அந்த ஸ்திரீ ஓடிப்போய்த் தன் கணவனிடத்தில் சங்கதியைச் சொல்ல அவர்களிருவருமாய் அந்தத் துரையைத் தூக்கிக் கொண்டுபோய் அவருக்குச் சிலசிகிச்சைகள் செய்தபிறகு அவர் மூர்ச்சை தெளிந்தார். ஆயினும் அவருக்கு நல்ல காயங்கள் பட்டிருந்ததினால் அவர் நடக்கக் கூடாமலிருந்தது. அந்தப் போர்ச்சேவகன் தன் வீட்டுக்குச் சங்கதி சொல்லியனுப்பவே, அநேகம் சேவகர்கள் வந்து அவரைத் தூக்கிக்கொண்டு பத்திரமாய்க்கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அந்த துரை காலையில் விழுந்திருக்க மாலைவரையிலும் அந்த நாய் சும்மா விருந்திருக்குமென்று எண்ணுதல் கூடாது. அவர் விழுந்துகிடந்த விடத்திற்குக் கொஞ்சதூரத்தில் கூலியாட்கள் போகிற ஒரு பாதை யிருக்கிறது. அந்த நாய் அங்கே சென்று கூலியாட்களைக் குரைத்துக் கூப்பிட்டிருக்கும். ஆனால் அவர்கள் மந்தபுத்தி யுடையவராகையால் என்னமோ குரைக்கிறதென்றெண்ணிப் பராமுகமாய்ப் போயிருக்கலாம்.

இயற்கைக்கு உதவிபுரிதல் வேண்டும்.

பறவைகளும் மிருகங்களும் அவைகளின் ஜீவனத்திற்காக எவ்வளவு கஷ்டப்படுகின்றனவென்று அநேகர் தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்கள். அவை யாடும்போதும் பாடும்போதும் அவைகளுக்கு அதைத்தவிர வேறு வேலை யில்லையென்று நினைக்கிறோம். வாஸ்தவத்தில் ஊணுக்காகவும் உறைவிடத்திற்காகவும் மனிதரைவிட அவைகள் அதிக கஷ்டப்படுகின்றன. கோடைகாலத்தில் பறவைகள் உல்லாசமாய் வெளியே திரிந்து உணவுதேடித் தின்று கூடுகளிலிருக்கும் குஞ்சுகளுக்கும் ஆகாரத்தைக் கொண்டுவந்து கொடுக்கின்றன. மாரிகாலத்தில் உணவு சேகரிப்பது அவ்வளவு சுலபமாயிராது. வீடுகளில் சஞ்சரிக்கிற புறா குருவி முதலிய சிறு பறவைகளுக்கு ஆகாரம் சுலபமாய்க் கிடைக்கலாம். காட்டுக்கோழி முதலிய பெரிய பக்ஷிகள் மழைக்காலத்தில் எப்படி உயிர் வாழ்கின்றன என்பதை நாம் யோசிப்பதில்லை. பக்ஷிகள் கூடு கட்டுவது அதிக விநோதம். ஒரு கூடு கட்டுவதற்குத் தேவையான வைக்கோல் துரும்புகளையும் மாக்குச்சிகளையும் கொண்டுவந்து சேர்ப்பதற்கு எத்தனை நடை போகவேண்டியதாயிருக்குமோ, எவ்வளவுதூரம் பறக்கவேண்டியதாயிருக்குமோ? ஒரு ஜாதிக் காட்டுக் குருவியின் கூடு ஒன்று 2,379 இறகுகளினால் கட்டப்பட்டிருந்ததாக மாக்கிலின் ரே என்னும் தாவர சங்கம சாஸ்திரி எழுதியிருக்கிறார். அவைகளை யெடுத்துவர எத்தனைதரம் அந்தக் குருவி சென்றிருக்கவேண்டும்? பக்ஷிகள் கூடுகட்டுகிற விடத்தருகில் சென்று சிறு இறகுகளைக் காற்றில் பறக்கும்படி ஊதிவிட்டுவிட்டால், அப்பறவைகள் அவைகளை அதிக சந்தோஷத்தோடு கௌவிக்கொண்டு போகும். அப்படிப்பட்ட விடங்களில் வைக்கோல் துண்டுகள், குதிரைமயிர், உலர்ந்த பாசி முதலிய குப்பையைப் போட்டுவைத்தால், அவைகளைப் பக்ஷிகள் வந்து பொறுக்கிக் கொண்டுபோகும். இவ்வாறு அவைகளுக்குச் சிறிய உதவிகள் செய்வது நமக்கு அதிக வின்பத்தைக் கொடுக்கும். பறவைகள் குஞ்சு பொரிக்கும்போது தாய்ப்பறவைக்கு வேலை அதிகம். சிலஜாதிக் குருவிகள் அவைகளின் குஞ்சுகளுக்கு நாள்முழுவதும் ஆகாரங் கொண்டுபோய்க் கொடுத்தவண்ணமா யிருக்கின்றன. அப்படிப்பட்ட சமயங்களில் அந்தப் பக்ஷிகள் ஒரேநாளில் 3,000 கம்பளிப்பூச்சிகளைக் கொல்லுகிறதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குருவிகளின் கூடுகளுக்கருகில் தானியம் முதலிய தின்பண்டங்களைக் கொஞ்சங் கொட்டிவைத்தால், அவைகளுக்குப் பெருத்த உபகாரமாயிருக்

கும். இவ்வித கஷ்டங்கள் பறவைகளுக்கு மாத்திர மிருப்பதாக நினைக்கக்கூடாது. சில காட்டுமிருகங்களும் நிலத்தில் 20 முதல் 100 கஜம் வரையில் ஆழமுள்ள வளைகள் தோண்டி, அவைகளில் வைக்கோல் முதலிய குப்பைகளைக் கொண்டுபோய்க் கூடுகள் கட்டிக்கொள்கின்றனவாம்.

இங்கிலாந்தில் முகட்டுப்பூச்சி முதலிய கிருமிகளின் சந்ததியை முழுதும் தொலைத்து விடுவதற்காக வழிகள் கண்டுபிடிக்கும் பொருட்டு ஒரு சங்கம் ஏற்பட்டு, அச்சிற்றுயிர்கள் தின்னுகிற பண்டங்களில் ஒருவித விஷத்தைக் கலப்பதினால் அவைகளுக்கு நோய்கண்டு, ஒருவாரம் அல்லது இரண்டு வாரங்களில் அவை மாண்டுவிடுகின்றனவாம். அவைகளை நிர்மூலமாய்ச் சங்காரஞ் செய்வது அசாத்தியமென்பது ஒருபக்கமிருக்க, இவ்வாறு சிருஷ்டியின் சுபாவநிலையைத் திருத்தப்புகுவது விவேகமுள்ள காரியமா வென்றும் யோசிக்கவேண்டியதா யிருக்கிறது. நாகரிகம் அதிகமாக வாக மனிதர் தங்களுடைய விபரீத புத்தியினால் இவ்வுலகத்தின் தோற்றத்தையே மாற்றிக்கொண்டு வருவதினால், பிரகிருதியும் தங்கள் சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி தன் இயல்பை மாற்றிக்கொள்ள வேண்டுமென்கிற அபிப்பிராயத்தை அவர்கள்கொண்டிருக்கிறார்கள்போலும். அவ்வாறு இயற்கைக்கு விரோதமான காரியங்களைச்செய்வதினால்நாம்அடைய நினைத்ததற்கு எதிரிடையான பயன் உண்டாகுமென்பதைக் கவனிக்கவேண்டும். பிரான்சு தேசத்துத் திராட்சத் தோட்டங்களில் பறவைகள் திராட்சப்பழங்களைக் கொத்தித் தின்கின்றனவென்று அவைகளை நாசஞ்செய்யத் தீர்மானித்துப் பறவை யொன்றுக்கிவ்வளவு பணமென்று கூலிகொடுத்து அவைகளைக் கொன்றார்கள். ஆனால் வரவரத் திராட்சக்கொடிகளின் செழிப்பு குறைந்து பழங்களெல்லாம் சொத்தைவிழுந்தும் பூசணம்பிடித்தும் கெட்டுப்போயின. இதைக் கண்ட தோட்டக்காரர்கள் இதென்ன விபரீதமென்று, முன் பறவைகளைக் கொல்லுவதற்குப் பணங் கொடுத்தாற்போல, மறுபடியும் உயிர்ப்பறவைகளைப் பணங்கொடுத்து வாங்கித் தோட்டங்களில் விட்டார்களாம். கொஞ்சநாளுக்குள் திராட்சப்பழங்கள் முன்போலவே பழுக்க வாரம்பித்தனவாம்.

யானைக்குக் குறும்பு செய்தல்.

யானைப்பாகன் ஒருவன் தன் யானையைத் தினந்தோறும் குளிப்பாட்ட ஆற்றுக்குக் கடைவீதி வழியாய் ஓட்டிக்கொண்டு போவான். கடைவீதியில் ஒரு மகம்மதியன் தையற் கடை வைத்திருந்தான். தையற் கடைக்காரன் யானைப்பாகனுக்கு நண்பன். ஆகையினால் ஆற்றுக்குப் போகும்போதும் வரும்போதும் பாகன் யானையை அந்தத் தையற் கடையண்டை நிறுத்துவது வழக்கம். ஒருநாள் தையற்காரன் யானையோடு குறும்பாய் விளையாட எண்ணி அதற்கு ஏதோ ஒன்றைக் கொடுப்பதுபோல் சைகை காட்டினான். அதைப் பெற்றுக்கொள்ள யானை தன் தும்பிக்கையைப் பலகணி வழியாய் நீட்டிற்று. உடனே தையற்காரன் தன் ஊசியால் அதன் துதிக்கையிற் குத்தினான். அதனால் யானைக்கு வெகு உபத்திரவம் உண்டாயிற்று. ஆயினும் யானை ஒன்றும் செய்யாமல் துதிக்கையை வெளியே எடுத்துக்கொண்டு ஆற்றுக்குப் போய்விட்டது. யானை ஆற்றில் குளித்தவுடன் தனக்கு வேண்டியமட்டும் ஜலம் அருந்தியபிறகு தண்ணீரை நன்றாய்க் கலக்கிச் சேறாக்கித் தன் துதிக்கை நிறைய மொண்டுகொண்டது. பாகன் இதைக் கவனிக்கவில்லை. அவன் வழக்கப்படி யானையைத் தையற் கடையண்டை கொண்டுவந்து நிறுத்தினான். அப்போது தையற்காரன் விலைபேறப்பெற்ற பட்டுச் சட்டைகள் தைத்துக்கொண்டிருந்தான். அதைக்கண்ட யானை தான் கொண்டுவந்த சேற்றுநீரை ஜன்னலின் வழியாய் இறைத்தது. அதனால் பட்டாடைகள் முழுதும் பாழாயின. தையற்காரன் தன் குற்றத்தைத் தானே யுணர்ந்து விசனப்பட்டான்.

ஒரு யானைப்பாகன் தன் யானையைப் பக்ஷமாய்ப் பராமரித்துவந்தான். அந்தப் பாகன் மிகவும் விளையாட்டுத்தன்மையும் எப்போதும் குறும்பே செய்யும் குணமுமுள்ளவன். ஒருதினம் அந்த யானைப்பாகனுக்குச் சில தேங்காய்களை உடைக்க நேர்ந்தது. அவன் அந்தத் தேங்காய்கள் அனைத்தையும் விளையாட்டாகத் தன் யானையின் மத்தகத்தின்மேல் உடைத்தான். அதனால் யானைக்குச் சகிக்கமுடியாத வலியுண்டாயிற்று. எனினும், யானை அப்போது ஒன்றும்செய்யாமலே

மிகவும் பொறுமையோடு மௌனமாயிருந்தது. ஆயினும் அவன் தனக்குச் செய்த கொடுமையைமாத்திரம் அது மறக்கவில்லை. சில நாட்களுக்குப் பிறகு பாகன் தன் யானையைத் தண்ணீர்த் துறைக்கு ஓட்டிக்கொண்டு போனான். போகும் வழியில் தென்னமரங்கள் வரிசையாக இருந்தன. அப்போது யானை தன் துதிக்கைக்கு எட்டக்கூடிய மரத்தில் இருந்த ஒரு பெரிய தேங்காயைப் பறித்துப் பாகன் தலையில் எறிந்தது. பாகன் தேங்காய் அடிபட்டுப் பதைபதைத்து உயிர் துடித்துக் கீழே விழுந்து மூர்ச்சையடைந்தான். தலையில் அடிபட்ட காயத்திலிருந்து இரத்தம் வெள்ளமாய்ப் பெருகிற்று. அக் காயம் ஆறி அவன் சொஸ்தமடைய நெடுநாள் ஆயிற்று. பிறகு அப்பாகன் அதனிடத்தில் வெகு ஜாக்கிரதையாய் நடந்துகொண்டான்.

ஆகையால், பிள்ளைகளே! யானை மிகவும் அறிவுடைய ஜெந்துவென்று விளங்குகின்றது; அன்றியும் அது தனக்கு ஒருவன் செய்த குற்றத்தையறிந்து அதற்கு ஏற்றவாறு தானும் செய்கிறது. அதனால் யானையினிடத்து யாதொரு குறும்பும் செய்யாமலிருப்பதே உத்தமம்.

விநோதமான நட்பு.

ஒருநாள் ஓர் நாய் தெருவில் கிடந்திருந்த ஓர் ஆமையோட்டைப் பார்த்து அதற்குள் ஓர் ஆமைக்குட்டி யிருந்தது தெரியாமல், ஒரு பெரிய எலும்பு அகப்பட்டதென்று நினைத்து அதைச் சாவகாசமாய்க் கடித்துத் தின்னவேண்டுமென்று அதைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோயிற்று. அங்கே சென்று அதைக் கீழே வைத்தவுடன் அதிலிருந்த ஆமைக்குட்டியொன்றுவெளியேவந்துநடக்க வாரம்பித்தது. தான் எலும்பென்று நினைத்த வஸ்துவில் ஒரு பிராணியிருக்கக்கண்டு அந்த நாய் அதிக வியப்புற்று அந்த ஆமையினிடத்தில் மிக்க அன்புவைத்து, அன்றுமுதலதற் குணவளித்து அதை விசுவாசத்துடன் வளர்த்துவந்தது. அந்த ஆமைக்கும் நாயினிடத்தில்மிகுதியான அன்புண்டாகி அவை இரண்டும் இணைபிரியா நட்புற்றன. இப்படியிருக்கையில், நாய்க்கேதோ நோய் கண்டதினால், அதை மிருக வைத்தியசாலைக்கு அனுப்பினார்கள். அப்பிரிவைச் சகியாமல், ஆமை சரியாய் ஆகாரங்கொள்ளாமல் எப்போதும் விசனமுற்றிருந்து நாளுக்குநாள் மெலிவடைந்தது. ஆமையையும் வைத்திய சாலைக் கனுப்பினார்கள். அங்கே அதற்குப் பலவித சிகிச்சை செய்தும் குணமாகாமற் போகவே, அதன் எஜமானன் நாயினின்றும் பிரிந்திருக்கிறதினால் அது அப்படி விசனமுற்றிருக்கிறதோ வென்னமோ பார்ப்போமென்று, அதை நாயிருக்கு மிடத்திற்குக் கொண்டுபோய் விடும்படிச் சொன்னார். அதைக் கேட்டவர்க ளெல்லோரும் நகைத்தார்கள். அவர்களுடைய எளனத்தை யவர் கவனியாமல் அவசியம் கொண்டுபோக வேண்டுமென்று சொல்லவே, அவர்கள் அப்படியே செய்தார்கள். நாயைக் கண்டதும் அந்தச் சிறிய ஜெந்து தன் சந்தோஷத்தைக் காண்பிக்கும்பொருட்டு அதனால் எவ்வளவு உரத்துக் கத்தமுடியுமோ அவ்வளவு உரத்துக் கூச்சல்போட்டது. நாயும் அதன் தோழனைத் தழுவி முத்தமிட்டது. அன்றுமுதல் அந்த ஆமையை நாயினிடத்திலிருந்து பிரிக்காமல் நாய்க்கு சவுக்கியமாகிறவரையில் அதையும் அதனுடன்கூடவே வைத்திருந்தார்கள். ஆமை ஒரு மருந்துமில்லாமலே நாளுக்குநாள் வலிவடைந்துவிட்டதாம்.

சமாசாரக் குறிப்புகள்.

1. பேவார்ஸ் நாய்களின் கொலை.—இதற்குமுன் பல வருடங்களாகச் சென்னையில் வீதிகளில் பேவார்ஸாகத் திரிந்துகொண்டிருந்த நாய்களைக் கொடூரமாய்த் தடிகளால் பகிரங்கமாய்ச் சங்காரம் செய்துகொண்டிருந்தார்கள். சென்னை ஜீ. ஹி. நி. சங்கத்தாரின் முயற்சியினால் இப்பொழுது வேப்பேரியிலிருக்கும் நாய்களின் ஆசிரயத்தில் நாய்களை விஷக் காற்றினால் சிறிது நேரத்தில் கொன்றுவிட லீதால் சேம்பர் என்னும் அறை யொன்று கட்டப்பட்டிருக்கிறபடியால், இவ்வருடத்தில் பார்ப்பவர்களுக்கு மனவருத்தம் உண்டாகும்படி வீதிகளில் நாய்களைக் கொல்லாமல் உயிருடன் அவைகளைப் பிடித்து மேற்கண்ட ஆசிரயத்துக்குக் கொண்டுபோய் விடுபவருக்கு நாயொன்றுக்கு அணா நாலுவீதம்

சன்மானம் கொடுக்கப்படுமென்று போலீஸ் கமிஷனரவர்கள் அறிக்கைசெய்திருப்பதைக் காண மிகச் சந்தோஷிக்கிறோம்.

---

2. **உருவம் பருத்த சீமைப் பசுக்கள்.**—இந்தியா தேசத்தில் ஒரு மஹாராஜாவுக்காகப் பருமனுள்ள நான்கு பசுக்கள் இங்கிலாந்து தேசத்தில் லிவர்ப்பூல் என்னும் நகரத்திலிருந்து கல்கத்தாவுக்குச் சென்ற நவம்பர்ஸ் 16உ ஹிஸ்டோரியன் என்கிற நீராவிக் கப்பலில் ஏற்றப்பட்டன. இப்பசுக்களுக்காக உத்தரவுபண்ணினபொழுது, அவைகள் முன்னங்காலடியிலிருந்து தோளின் முசுப்பு நுனிவரையில் 5 அடி 4 அங்குலம் உயரமும், மூக்கின் முனையிலிருந்து வாலின் எலும்பு பாகம்வரையில் 14 அடி நிகளமுமுள்ளனவா யிருக்கவேண்டுமென்று அம்மஹாராஜா கோரினர். இவ்விதம் பருத்த அளவுள்ள ஜெந்துக்கள் சுலபமாய் அகப்படாமையால், தேவையான அளவுள்ள நான்கு பசுக்கள் அகப்பட ஏஜெண்டுகளுக்குச் சரியாய் 16 மாசங்கள் பிடித்தன. இப்படிப்பட்ட பசுக்கள் 'மிட்லண்ட்ஸ்' என்னும் மத்தியநாட்டிலும், யார்க் மாகாணத்திலும் கடைசியாக அகப்பட்டன. இவைகளெல்லாம் குறுகின கொம்புள்ளனவாம். இவைகளில் ஒன்றுதான் கோரியபடி சரியான அளவுள்ளது. மற்றவை ஒரு அங்குலம் குறைவாகவே யிருக்கின்றன. இவைகளுக்காகவென்று பிரத்தியேகமாய்ச் செய்யப்பட்ட பெட்டிகளில் இப்பசுக்களை யிருத்தி இந்தியாவுக்கு அனுப்பினார்கள்.

---

3. **ரேன்கான்டர் துரைக்குச் சன்மானம்.**—சென்னை ஜீ. ஹி. நி. சங்கத்துக்குக் கடந்த 9 வருஷ காலமாய்க் காரியதரிசியாயிருந்த ரென்கான்டர் துரை அவர்கள் இங்கிலாந்து தேசத்திற்குச் செல்ல உத்தேசித்தபடியால் சென்ற ஏப்பிரல் மாசத்தில் அவருக்கு ஓர் சன்மானம்செய்வதற்காகச்சங்கத்தினர்சபை கூடினார்கள். அப்பொழுது சங்கத்தாரால் வெள்ளியினால் செய்விக்கப்பட்ட சில தே, காபி குடிக்கும் பாத்திரங்களைச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகியகனம்:சர் ஆர்னால்ட் ஒயிட் துரை அவர்கள் ரென்கான்டர் துரைக்குச் சன்மானமாக அளித்து, ரென்கான்டர் துரையின் விடாமுயற்சியினால் இச்சங்கம் அபிவிர்த்தி யடைந்ததென்றும், மேற்கண்ட துரையவர்கள் இங்கிலாந்துக்குச் சுகமாய்ப் போய் வந்து திரும்பவும் இச்சங்கத்தின் வேலைகளுக்கு மிக்க உதவிபுரிய வேண்டுமென்றும் பிரசங்கித்தனர். அதற்குப் பதில் ரென்கான்டர் துரையவர்களும் தாம் இச்சங்கத்தின் காரியங்களைச் சரிவர நடத்திவந்ததற்கு, காலஞ்சென்ற அக்கிராசனாதிபதியாகிய பாடம் துரையவர்களும் சங்கத்தின் மற்ற அங்கத்தினரும் தம்மோ டொத்துத் தமக்குச் செய்துவந்த உதவியே காரணமென்று பிரதியுத்தரம் கொடுத்தனர்.

---

4. **ஓர் நாயின் அறிவு.**—ஒருநாள் ஈடன் என்னும் துரை யொருவர் குதிரைச் சவாரி போனபோது தன்னுடன் கொண்டுபோயிருந்த கம்பளியை எங்கேயோ இழந்துவிட்டார். அதை அவர் வீட்டுக்குத் திரும்பி வருவதற்குமுன் கவனிக்கவில்லை. இது இப்படியிருக்க, அன்று காலையில் அவருடைய நாய் எங்கெங்கோ திரிந்துவிட்டு அதிர்ஷ்டவசமாய் அந்தக் கம்பளி விழுந்துகிடந்த வீதியில் நுழைந்தது. அது அந்தக் கம்பளியைப் பார்த்தவுடன் தன் எஜமானனுடையதென்று அறிந்து, அதனருகிலேயே உட்கார்ந்துகொண்டு எஜமானனுடைய வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அது அன்றெல்லாங் காத்திருந்தும் எஜமானன் வரவில்லை. அதனிடத்திலிருந்த கம்பளியைப் பறித்துக்கொள்ளும்பொருட்டு, அதற்கு இறைச்சித் துண்டுகள் முதலிய தின்பண்டங்களைக் கொடுப்பது முதலான வழிப்போக்கர் செய்த தந்திரங்களுக்கெல்லாம் அது இடங்கொடுக்காமல் வெகுநேரம்வரையில் காத்திருந்தது. பிறகு அவ்வழியாய்ச் சென்ற ஈடன்துரையின் சிநேகித ரொருவர் அந்த நாய் தம் சிநேகிதருடையதென் றறிந்து அவருக்குப் போய்ச் சங்கதியைச் சொல்லவே, அவர் வந்து தம் கம்பளியை யெடுத்துக்கொண்டு நாயையு மழைத்துக்கொண்டு போனார்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1910.